## தீஸ்தா நதி வெள்ள பாதிப்பு: சிக்கிமில் காணாமல் போன 102 பேரை தேடும் பணி தீவிரம்

**காங்டாக்:** சிக்கிம் மாநிலத்தின் வட பகுதியில் கடந்த 3-ம் தேதி இரவு மேக வெடிப்பு காரணமாக கனமழை பெய்தது. இதனால் தீஸ்தா நதியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.

இந்த திடீர் வெள்ளப் பெருக்கால் சிக்கிம் மாநிலத்தில் 22,034 பேர் பாதிக்கப்பட்டனர். இவர்களில் 2,011 பேர் மீட்கப்பட்டதாக சிக்கிம் மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் தெரிவித்துள்ளது.

திடீர் வெள்ளத்தில் ராணுவ முகாமும் சேதமடைந்ததால், அங்கிருந்த 22 வீரர்கள் உட்பட 102 பேரை காணவில்லை. இவர்களை தேடும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக 4 மாவட்டங்களில் 26 நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு ஆயிரக்கணக்கானோர் தங்கியுள்ளனர். வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட சிங்தாம் பகுதியை சிக்கிம் முதல்வர் பிரேம் சிங் தமாங் பார்வையிட்டார். பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வுக்கு தேவையான அனைத்து உதவிகளும் அளிக்கப்படும் என அவர் உறுதியளித்துள்ளார்.

தீஸ்தா நதி வெள்ளத்தால் சிக்கிம் மாநிலத்தில் 11 பாலங்கள் சேதமடைந்தன. மங்கன் மாவட்டத்தில் மட்டும் 8 பாலங்கள் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. 4 மாவட்டங்களில் மொத்தம் 277 வீடுகள் சேதமடைந்துள்ளன. சங்தங் மற்றும் மங்கன் ஆகிய பகுதிகளில் எல்லைகள் ரோடு அமைப்பினர் (பிஆர்ஓ) மீட்பு பணியில் உதவி வருகின்றனர்.

**Asian Games 2023 | இந்தியாவுக்கு இன்று ஒரே நாளில் 3 தங்கப்பதக்கம்!**



இந்திய வில்வித்தை வீரர்கள் மற்றும் வீராங்கனைகள்

**ஹாங்சோ:** ஆசிய விளையாட்டுப் போட்டியில் வியாழக்கிழமை (அக்.5) அன்று இந்தியா சார்பில் வில்வித்தை, ஸ்குவாஷ் மற்றும் மல்யுத்த விளையாட்டில் இந்தியா பதக்கம் வென்றுள்ளது.

19-வது ஆசிய விளையாட்டு போட்டி சீனாவின் ஹாங்சோ நகரில் நடைபெற்று வருகிறது. இதில் இதுவரை இந்தியா 21 தங்கம், 32 வெள்ளி மற்றும் 33 வெண்கலம் வென்று 86 பதக்கங்களுடன் பதக்கப் பட்டியலில் நான்காவது இடத்தில் உள்ளது. முதல் மூன்று இடங்களில் சீனா, ஜப்பான் மற்றும் தென் கொரியா உள்ளது.

**வில்வித்தை மகளிர் காம்பவுண்டு பிரிவு:** இதில் இறுதிப் போட்டியில் சீன தைபே அணியை வீழ்த்தி பர்னீத் கவுர், ஜோதி சுரேகா மற்றும் அதிதி கோபிசந்த் அடங்கிய இந்திய வீராங்கனைகள் தங்கப்பதக்கம் வென்றுள்ளனர். 230 ஸ்கோருடன் இந்தியா தங்கத்தை வென்றது.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

**ஸ்குவாஷ் கலப்பு இரட்டையர்:** தீபிகா பல்லிகல் மற்றும் ஹரிந்தர்பால் சிங் சந்து இணையர் ஸ்குவாஷ் கலப்பு இரட்டையர் பிரிவில் மலேசியாவை வீழ்த்தி தங்கம் வென்றனர்.

**வில்வித்தை ஆடவர் காம்பவுண்டு பிரிவு:** அபிஷேக், ஓஜஸ் மற்றும் பிரதமேஷ் ஆகியோர் அடங்கிய இந்திய அணியினர் இறுதிப் போட்டியில் தென் கொரியாவை வீழ்த்தி தங்கம் வென்றது. 235 ஸ்கோருடன் இந்தியா இந்த பதக்கத்தை வென்றது.

**ஸ்குவாஷ் ஆடவர் ஒற்றையர் இறுதிப் போட்டி:** ஸ்குவாஷ் ஆடவர் ஒற்றையர் இறுதிப் போட்டியில் இந்திய வீரர் சவுரவ் கோஷல் வெள்ளி வென்றார்.

**மல்யுத்தம்:** மகளிர் 53 கிலோ மல்யுத்த போட்டியில் வெண்கலம் வென்றார் இந்தியாவின் ஆண்டிம் பங்கல்.

**Asian Games 2023 | ஸ்குவாஷில் தங்கம் வென்றார் தமிழகத்தின் தீபிகா பல்லிகல்: வில்வித்தையிலும் இந்தியாவுக்கு 2 தங்கப் பதக்கம்**



ஆசிய விளையாட்டின் ஸ்குவாஷ் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற இந்தியாவின் தீபிகா பல்லிகல், ஹரிந்தர் பால் சிங் சாந்து ஜோடி.

**ஹாங்சோ:** ஆசிய விளையாட்டு போட்டியின் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் தீபிகா பல்லிகல், ஹரிந்தர் பால் சிங் சாந்து ஜோடி தங்கப்பதக்கம் வென்றது. வில்வித்தையிலும் இந்தியாவுக்கு 2 தங்கப் பதக்கம் கிடைத்தது.

19-வது ஆசிய விளையாட்டு போட்டி சீனாவின் ஹாங்சோ நகரில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று ஸ்குவாஷ் கலப்பு இரட்டையர் பிரிவு இறுதிப் போட்டியில் இந்தியாவின் தீபிகா பல்லிகல், ஹரிந்தர் பால் சிங் சாந்து ஜோடி, மலேசியாவின் ஐஃபா பின்தி அஸ்மான், முகமது சியாஃபிக் கமால் ஜோடியை எதிர்த்து விளையாடியது.

35 நிமிடங்கள் நடந்த இந்த ஆட்டத்தில் தீபிகா பல்லிகல், ஹரிந்தர் பால் சிங் சாந்து ஜோடி 11-10, 11-10 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று, சாம்பியன் பட்டம் வென்றது. இதில் தீபிகா பல்லிகல் தமிழகத்தை சேர்ந்தவர். இவர், பிரபல இந்திய கிரிக்கெட் வீரர் தினேஷ் கார்த்திக்கின் மனைவி ஆவார்.

ஸ்குவாஷில் ஆடவருக்கான ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் இந்தியாவின் சவுரவ் கோஷல்11-9, 9-11, 5-11, 7-11 என்ற செட் கணக்கில் மலேசியாவின் இயன் யோவிடம் தோல்வி அடைந்து வெள்ளிப் பதக்கம் பெற்றார்.

வில்வித்தையில் மகளிருக்கான காம்பவுண்ட் அணிகள் பிரிவு இறுதிப் போட்டியில் ஜோதிசுரேகா, அதிதி கோபிசந்த், பிரனீத்கவுர் ஆகியோரை உள்ளடக்கிய இந்திய அணி, சீன தைபே அணியை 230-229 என்ற கணக்கில் வீழ்த்தி தங்கப் பதக்கம் வென்றது.

ஆடவருக்கான காம்பவுண்ட் அணிகள் பிரிவு இறுதிப் போட்டியில் ஓஜாஸ் பிரவின் டியோடலே, அபிஷேக் வர்மா, பிரதமேஷ் சமதான் ஜாவ்கர் ஆகியோரை உள்ளடக்கிய இந்திய அணி 235-230 என்ற கணக்கில் தென் கொரியா அணியை வீழ்த்தி தங்கப் பதக்கம் வென்றது.

**பிரனோய் அசத்தல்:** பாட்மிண்டனில் ஆடவருக்கான ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் ஹெச்.எஸ்.பிரனோய் அரை இறுதி சுற்றுக்கு முன்னேறினார். கால் இறுதி சுற்றில் அவர், 78 நிமிடங்கள் போராடி 21-16, 21-23, 22-20 என்ற செட் கணக்கில் மலேசியாவின் லீ ஸி ஜியாவை வீழ்த்தினார். அரை இறுதிக்கு முன்னேறியதால் குறைந்தபட்சம் வெண்கலப் பதக்கம் கைப்பற்றுவதை பிரனோய் உறுதி செய்தார்.

இதன்மூலம் ஆசிய விளையாட்டு போட்டி பாட்மிண்டனில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் 41 ஆண்டுகளுக்கு பிறகு பதக்கம் வெல்லும் இந்திய வீரர் என்ற பெருமையை அவர் பெற உள்ளார்.இதற்கு முன்பு 1982-ம் ஆண்டு டெல்லியில் நடைபெற்ற ஆசிய விளையாட்டு போட்டியில் சையதுமோடி வெண்கலப் பதக்கம் வென்றிருந்தார்.

பாட்மிண்டனில் மகளிர் ஒற்றையர் பிரிவு கால் இறுதி சுற்றில் இந்தியாவின் பி.வி.சிந்து, உலகத்தரவரிசையில் 5-வது இடத்தில்உள்ள சீனாவின் பிங்ஜியாவோவை எதிர்த்து விளையாடினார். 47 நிமிடங்கள் நடந்த இந்தஆட்டத்தில் சிந்து 16-21,12-21என்ற நேர் செட் கணக்கில் தோல்வி அடைந்தார்.

ஆடவருக்கான கபடியில் 7 முறை சாம்பியனான இந்திய அணி லீக் ஆட்டத்தில் நேற்று சீன தைபேவுடன் மோதியது. இதில்இந்திய அணி 50-27 என்ற கணக்கில் வெற்றி பெற்று அரை இறுதிசுற்றுக்கு முன்னேறியது. இதன்மூலம் குறைந்தபட்சம் வெண்கலப் பதக்கத்தை உறுதி செய்தது.

மல்யுத்தத்தில் மகளிருக்கான 53 கிலோ எடைப் பிரிவில் இந்தியாவின் அன்டிங் பங்கல் 3-1 என்ற கணக்கில் மங்கோலியாவின் போலோர்துயா பேட்-ஒச்சிரை வீழ்த்தி வெண்கலப் பதக்கம் வென்றார்.

**ஹாக்கியில் தோல்வி:** மகளிர் ஹாக்கி அரை இறுதியில் இந்திய அணி 0-4 என்ற கோல்கணக்கில் சீனாவிடம் தோல்வி அடைந்தது. இதனால் தங்கப் பதக்கம்

வென்று அடுத்த ஆண்டு நடைபெற உள்ள பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கு நேரடியாக தகுதி பெறும் இந்திய மகளிர் ஹாக்கி அணியின் கனவு கலைந்தது.

## ரெப்போ விகிதம் 6.5 சதவீதத்திலேயே தொடரும்: ரிசர்வ் வங்கி அறிவிப்பு

**மும்பை:** ரெப்போ விகிதம் முந்தைய அளவான 6.5 சதவீதத்திலேயே தொடரும் என்று ரிசர்வ் வங்கி ஆளுநர் சக்திகாந்த தாஸ் அறிவித்துள்ளார். இத்துடன் தொடர்ந்து 4-வது முறையாக ரெப்போ விகிதம் மாற்றம் செய்யப்படாதது குறிப்பிடத்தக்கது.

இரு மாதங்களுக்கு ஒரு முறை ரிசர்வ் வங்கியின் நிதிக் கொள்கைக் குழு கூடி, ரெப்போ விகிதம் தொடர்பாக முடிவுகள் எடுப்பது வழக்கம். அதன்படி கடந்த இரண்டு நாட்களாக ரிசர்வ் வங்கியின் நிதிக்கொள்கைக் குழு கூட்டம் மும்பையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ரெப்போ விகிதத்தை முந்தைய அளவான 6.5 சதவீதத்திலேயே தொடர முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ரெப்போ விகிதம் என்பது வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி வழங்கும் கடனுக்கு விதிக்கப்படும் வட்டி விகிதமாகும். ரெப்போ விகிதம் உயரும் போது வீடு மற்றும் வாகனக் கடன்களுக்கான வட்டி விகிதம் அதிகரிக்கும். ஆனால் தொடர்ந்து 4வது முறையாக இது 6.5 சதவீதத்திலேயே தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளதால் வீடு, வாகன கடன் வட்டி விகிதங்களும் மாறாது.

இதுகுறித்து ரிசர்வ் வங்கி ஆளுநர் சக்திகாந்த தாஸ் கூறுகையில், "பேரினப் பொருளியல் ஸ்திரத்தன்மை மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சி ஆகியனதான் நம் நாட்டின் வளர்ச்சிக்கான அடிப்படைக் கோட்பாடுகளாகும். கடந்த சில ஆண்டுகளாக பலதரப்பட்ட, இணையற்ற பொருளாதார அதிர்வுகளின் ஊடே நாம் எடுத்த நிதிக் கொள்கைகள் பேரினப் பொருளாதாரம் மற்றும் நிதிநிலை ஸ்திரத்தன்மை வழிவகுத்துள்ளது.

தற்சமயம் ரெப்போ விகிதத்தை 6.5 சதவீதத்திலேயே தொடர முடிவு செய்துள்ளோம். தொடர்ந்து பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன" என்று தெரிவித்தார்.

**6.5 சதவீத வளர்ச்சி:** மேலும் அவர் கூறுகையில், "அனைத்து காரணிகளையும் கருத்தில் கொண்டு ஆய்வு செய்ததன் பேரில், 2023-24 நிதியாண்டில் ஜிடிபி (ஒட்டுமொத்த வளர்ச்சிக் குறியீடு) 6.5 சதவீதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது" என்றார்.

## நார்வே எழுத்தாளருக்கு இலக்கியத்துக்கான நோபல் பரிசு

**ஸ்டாக்ஹோம்:** நார்வே நாட்டை சேர்ந்த எழுத்தாளர் ஜான் பாஸ் (64) இலக்கியத்துக்கான நோபல் பரிசுக்கு தேர்வு செய்யப்பட்டு உள்ளார்.

மருத்துவம், இயற்பியல், வேதியியல், இலக்கியம், அமைதி, பொருளாதாரம் ஆகிய 6 துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்படுகிறது. கடந்த 2-ம் தேதி முதல்மருத்துவம், இயற்பியல், வேதியியல் ஆகியவற்றுக்கான நோபல்பரிசுகள் அடுத்தடுத்த நாட்களில்அறிவிக்கப்பட்டன. இதைத்தொடர்ந்து நேற்று இலக்கியத்துக்கான நோபல் பரிசு நார்வே நாட்டை சேர்ந்த எழுத்தாளர் ஜான் பாஸுக்கு அறிவிக்கப்பட்டது.

கடந்த 1959-ம் ஆண்டில் நார்வேநாட்டின் ஹாஜேசண்ட் பகுதியில் ஜான் பாஸ் பிறந்தார். 7 வயதில் மிகப்பெரிய விபத்தில் சிக்கி உயிர் தப்பினார். இந்த விபத்து அவரது வாழ்க்கையில் திருப்பு முனையை ஏற்படுத்தி பிற்காலத்தில் எழுத்தாளராக உருவெடுக்கச் செய்தது. கடந்த 1983-ம் ஆண்டில் அவரது முதல் நாவல் ரெட்- பிளாக் வெளியானது.

**70-க்கும் மேற்பட்ட படைப்புகள்:** இதைத் தொடர்ந்து நாவல், கவிதை, கட்டுரை, நாடகம் என 70-க்கும் மேற்பட்ட படைப்புகளை அவர் உருவாக்கி உள்ளார். அவரது முக்கிய படைப்புகள் சுமார் 40-க்கும் மேற்பட்ட மொழிகளில்

மொழிபெயர்க்கப்பட்டு உள்ளன. டெல்லி டெலிகிராப் நாளிதழ் வெளியிட்ட உலகின் 100 அறிவுஜீவிகளில் எழுத்தாளர் ஜான் பாஸ் 83-வது இடத்தைப் பிடித்தார். அவருக்கு 2023-ம் ஆண்டு இலக்கியத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டு உள்ளது.

இதுதொடர்பாக ஸ்வீடிஷ் அகாடமி நேற்று வெளியிட்ட அறிக்கையில், “மனித உணர்வுகளை தனது படைப்புகளின் மூலம் தத்ரூபமாக வெளிப்படுத்தியவர் ஜான் பாஸ். இதன்காரணமாக அவருக்கு இலக்கியத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட உள்ளது" என்று கூறப்பட்டிருக்கிறது.

எழுத்தாளர் ஜான் பாஸ் கூறும்போது, “எனக்கு நோபல் பரிசு கிடைத்திருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இது எனக்கான விருது கிடையாது. இலக்கிய உலகத்துக்கான விருது" என்று தெரிவித்துள்ளார்.

இந்திய வம்சாவளியை சேர்ந்த பிரிட்டிஷ் எழுத்தாளர் சல்மான் ருஷ்டிக்கு இலக்கியத்துக்கான நோபல் பரிசு கிடைக்கும் என்று தகவல்கள் வெளியாகின. ஆனால் இந்த ஆண்டு அவருக்கு நோபல் பரிசு கிடைக்கவில்லை. இதுவரை 120 பேருக்கு இலக்கியத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டிருக்கிறது. இதில் 17 பேர் மட்டுமே பெண்கள் ஆவர். இதுதொடர்பாகவும் தொடர்ந்து விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

**இன்று அமைதிக்கான நோபல்:** உலகம் முழுவதும் பெரிதும் எதிர்பார்க்கப்படும் அமைதிக்கான நோபல் பரிசு இன்று வெளியிடப்பட உள்ளது. உக்ரைன் போர் உட்பட உலகின் பல்வேறு பகுதிகளில் போர் பதற்றம் நீடிக்கும் நிலையில் இந்த ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு முக்கியத்துவம் பெற்றுள்ளது. வரும் 9-ம் தேதி பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட உள்ளது.